Bail for Immigration Detainees

REFUGEE COUNCIL

June 2009 Tamil

# வீடியோ இணைப்பு ஜாமீன் மனு விசாரணைகள்

இச்சிற்றேடு, யூகேயில் காவல் மையங்களிலும் மற்றும் சிறைச்சாலைகளிலும் குடிவரவு அதிகாரங்களின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கானது. நீங்கள் ஒரு ஜாமீன் மனு விசாரணையை (bail hearing) எதிர்கொள்பவராக இருப்பின், அது நீதிமன்றத்தில் அல்லாமல் வீடியோ இணைப்பின் மூலம் நடத்தப்படக் கூடுமாதலால், நீங்கள் இந்தச் சிற்றேட்டைப் படிக்க வேண்டியது அவசியமாகும்.

கீழ்க்கண்டவற்றை இச்சிற்றேடு விளக்குகிறது:

- வீடியோ இணைப்பு வழக்கு விசாரணையின் பொருள் மற்றும் விசாரணை எவ்விதம் நடத்தப்படும்.
- ஜாமீன் மனு மீதான விசாரணை நீதிமன்றத்தில் நடத்தப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அதற்கு என்ன செய்ய வேண்டும்
- வீடியோ இணைப்பு ஜாமீன் மனு விசாரணை பற்றிய கூடுதல் விவரங்களை நீங்கள் எப்படிப் பெறமுடியும்
- உங்கள் ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டால், நீங்கள் என்ன செய்ய வேண்டும் மற்றும் உங்கள் ஜாமீன் மனு மீதான விசாரணை குறித்து நீங்கள் எப்படி புகாரளிக்கலாம்.

*முக்கியமான விதிகள்:*
ஜாமீன் மனு மீதான விசாரணை என்பது, நீங்கள் விடுதலை செய்யப்படலாமா அல்லது காவலில் வைக்கப்பட வேண்டுமா என்பது குறித்து ஒரு நீதிபதி முடிவு செய்வதாகும். பிணையதாரர் (surety) என்பவர், நீங்கள் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டால், நீங்கள் நீதிமன்றத்துடனும் மற்றும் குடிவரவு அதிகாரிகளுடனும் தொடர்பில் இருப்பதை தாங்கள் உறுதி செய்வதைக் காட்டுவதற்காக நீதிபதிக்கு தொகை அளிப்பதற்கு உறுதிமொழி தருபவராவார்.

## வீடியோ இணைப்பு ஜாமீன் மனு விசாரணை என்றால் என்ன?

இந்த ஜாமீன் மனு மீதான விசாரணையின்போது, நீங்கள் காவல் மையத்திலேயே இருப்பீர்கள் மற்றும். குடிவரவு நீதிபதியும், உள்துறை அமைச்சக பிரதிநிதியும் நீதிமன்றத்தில் இருப்பார்கள். நீதிமன்றத்துடன் நீங்கள் ஒரு வீடியோ கேமராவின் மூலம் இணைக்கப்படுவீர்கள். ஜாமீன் அடிப்படையில் நீங்கள் விடுதலை செய்யப்படலாமா என்பதை நீதிமன்றம் முடிவு செய்வதே இந்த விசாரணையின் நோக்கமாகும். உங்களுக்கு ஒரு சட்டப் பிரதிநிதி, ஒரு மொழிபெயர்ப்பாளர் அல்லது யாரேனும் பிணையதாரர்கள் இருந்தால், அவர்களும் நீதிமன்றத்தில் இருப்பார்கள்.

Bail for Immigration Detainees (BID) is registered in England as a limited company number 3803669.
Registered address: 28 Commercial St, London, E1 6LS. Registered charity number 1077187.
Exempted by the OISC reference number N200100147

British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: 240-250 Ferndale Road, London SW9 8BB, United Kingdom, VAT reg no: 936 519 988

OISC No: N200100132 Community Legal Service

## என்னால் பார்க்க மற்றும் கேட்க முடிவது என்ன?

ஒரு தொலைக்காட்சி திரை உள்ள அறையில் நீங்கள் அமர வைக்கப்படுவீர்கள். திரையில், நீதிபதி, உள்துறை அமைச்சகப் பிரதிநிதி, உங்கள் சட்டப் பிரதிநிதி (நீங்கள் அமர்த்தியிருந்தால்), மொழிபெயர்ப்பாளர் மற்றும் பிணையதாரர்களை உங்களால் பார்க்கவும் மற்றும் அவர்கள் கூறுவதைக் கேட்கவும் முடியும். விசாரணை தொடங்குவதற்கு முன், 'தொலைக்காட்சித் திரையில், நீதிமன்றத்தில் நடைபெறும் அனைத்தையும் பார்க்கவும் மற்றும் கேட்கவும் உங்களால் முடிகிறதா?' என்று நீதிபதியோ அல்லது நீதிமன்ற அலுவலரோ கேட்க வேண்டும். உங்களால் முடியாவிட்டால், உங்களால் முடியும் வரை விசாரணையை நிறுத்தி வைக்கும்படி நீங்கள் அவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

## என் ஜாமீன் மனு மீதான விசாரணை எப்போது தொடங்கும் என்பது எனக்கு எப்படித் தெரியும்?

நீங்கள் பெறுகின்ற, உங்கள் ஜாமீன் மனு மீதான விசாரணையின் தேதியை உங்களுக்கு அறிவிக்கும் கடிதமானது (உங்கள் விசாரணைக்கான அறிவிப்பு ('Notice of Hearing') என்று அழைக்கப்படுவது), விசாரணை துவங்கும் நேரத்தையும் உங்களுக்குத் தெரிவிக்கும். இருப்பினும், காலை 10 மணிக்கு மூன்று வழக்குகளும், பிற்பகல் 2 மணிக்கு மூன்று வழக்குகளும் நடைபெற உள்ளதால், உங்கள் விசாரணை சிறிது நேரம் கழித்துத் தொடங்கக்கூடும். உங்கள் விசாரணைக்கான நேரம் வரும்போது, காவல் மையத்திலுள்ள பணியாளர் உங்களை அழைப்பார்.

## என் சட்டப் பிரதிநிதியுடன் என்னால் பேச இயலுமா?

உங்களுக்கு ஒரு சட்டப் பிரதிநிதி இருப்பாரானால், உங்கள் விசாரணைக்கான அறிவிப்புக் கடிதத்தில், உங்கள் ஜாமீன் மனு விசாரணை துவங்குவதற்காகக் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாக அவர் நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுவார். விசாரணை தொடங்குவதற்குமுன், உங்கள் சட்டப் பிரதிநிதியுடன் பேசுவதற்கு உங்களுக்கு பத்து நிமிடங்கள் அளிக்கப்படும். இந்த நேரத்தில், நீதிமன்றத்தில் உங்கள் சட்டப் பிரதிநிதியுடன் நீதிபதி, உள்துறை அமைச்சக பிரதிநிதி ஆகியோர் இருக்கமாட்டார்கள்.

## எனக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் கிடைப்பாரா மற்றும் அவர் என்ன செய்வார்?

உங்கள் ஜாமீன் மனு விசாரணை ஆங்கிலத்தில் நடத்தப்படும். உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், ஜாமீன் விண்ணப்பப் படிவத்தைப் (Bail Application Form) (B1 படிவம் (B1 form) என்றும் அழைக்கப்படுகிறது) பயன்படுத்தி நீங்கள் ஒருவரைக் கேட்க வேண்டும். உங்கள் ஜாமீன் விசாரணையின்போது உங்கள் மொழிபெயர்ப்பாளரும் நீதிமன்றத்தில் இருப்பார் மற்றும் வீடியோ இணைப்பைப் பயன்படுத்தி அவர் உங்களுடன் பேசுவார். அங்குள்ளவர்கள் உங்களிடம் நேரடியாகக் கேட்கும் கேள்விகள் மட்டுமல்லாது, நீதிமன்ற அறையில் கூறப்படுபவை அனைத்தையும் அவர் உங்களுக்குக் கூறவேண்டும். இது நடைபெறவில்லையென்றால், உங்கள் சட்டப் பிரதிநிதியிடமோ அல்லது நீதிபதியிடமோ நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

## ஜாமீன் மனு மீதான விசாரணை எவ்வளவு நேரம் நீடிக்கும்?

உங்களுக்கு ஜாமீன் வழங்குவதா அல்லது ஜாமீன் மறுப்பதா என்பதை நீதிபதி முடிவு செய்யும்வரை அது தொடரும். வீடியோ இணைப்பின் மூலம் விசாரணை முழுவதையும் உங்களால் பார்க்க முடியும். நீதிமன்றத்தில் விசாரணை முடிவுறாத நிலையில் வீடியோவின் இணைப்பு நிறுத்தப்படக்கூடாது. இது நடைபெறுமானால், நீங்கள் அது குறித்து புகார் அளிக்கலாம் - கீழே கொடுக்கப்பட்டுள்ள புகார் அளிப்பது பற்றிய விவரங்களைப் பார்க்கவும்.

## என் பிணையதாரர்களை எங்கு செல்ல வேண்டுமென்று கூற எனக்கு எப்படித் தெரியும்?

‘விசாரணைக்கான அறிவிப்புக்’ கடிதம், நீதிமன்றத்தின் பெயர் மற்றும் முகவரியை அளிக்கும். உதாரணமாக, கேம்ப்ஸ்ஃபீல்ட் என்பது வேல்ஸில் அமைந்துள்ள நியூபோர்ட் என்னுமிடத்தில் உள்ள நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகும். உங்கள் காவல் மையம் எந்த நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறியாவிட்டால், உங்கள் காவல் மையத்தின் அலுவலகத்தில் நீங்கள் கேட்க வேண்டும். உங்கள் பிணையதாரர்கள் செல்வதற்கு ஏற்றபடி இல்லாமல் அது வெகு தொலைவில் இருக்குமானால், உங்கள் ஜாமீன் மனுப் படிவத்தில் நீங்கள் வேறொரு நீதிமன்றத்தைக் கேட்கலாம். இது குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின், குடிவரவு காவலில் உள்ளவர்களுக்கு ஜாமீன் (Bail for Immigration Detainees - BID) அமைப்புடன் பேசவும் - தொலைபேசி எண்கள் இந்த ஆவணத்தின் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ளன.

## விசாரணையின்போது எத்தகைய ஆவணங்கள் பயன்படுத்தப்படும்?

விசாரணைக்குமுன், நீதிமன்றத்திலிருந்து உங்கள் ‘விசாரணைக்கான அறிவிப்புக்’ கடிதத்தையும் (இது உங்கள் விசாரணைக்கான தேதி மற்றும் நேரத்தையும், நீதிமன்றத்தின் பெயர் மற்றும் முகவரியையும் உங்களுக்கு அளிக்கிறது), நீங்கள் ஏன் காவலில் வைக்கப்பட வேண்டும் என்பதற்கான உள்துறை அமைச்சகத்தின் காரணங்களை அளிக்கும் உள்துறை அமைச்சகத்தின் ‘ஜாமீன் தொகுப்புரை’யையும் (‘Bail Summary’) நீங்கள் பெற வேண்டியது அவசியமாகும். உங்களுக்கு ஒரு சட்டப் பிரதிநிதி இருப்பாரானால், அவர் விசாரணையின்போது உள்துறை அமைச்சகத்திற்கும் நீதிபதிக்கும், அவர்கள் பயன்படுத்தக்கூடிய அனைத்து ஆவணங்களையும் அளிக்க வேண்டும். உங்களுக்கு ஒரு சட்டப் பிரதிநிதி இல்லாவிட்டால், மற்றும் நீதிபதியும் உள்துறை அமைச்சகமும் பார்க்க வேண்டுமென்று நீங்கள் விரும்பும் ஆவணங்கள் உங்களிடம் இருந்தால், விசாரணைக்குமுன் அவற்றை நீங்கள் தொலைநகல் மூலம் அனுப்ப வேண்டும். இது குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின், BID உடன் பேசவும்.

## என் ஜாமீன் மனு மீதான விசாரணையின்போது நான் நீதிமன்றத்தில் இருக்க விரும்புகிறேன், நான் என்ன செய்ய வேண்டும்?

வீடியோ இணைப்பு ஜாமீன் மனு விசாரணையில் உங்களுக்கு விருப்பமில்லையென்றால் மற்றும் நீங்கள் நேரடியாகக் நீதிமன்றத்தில் ஆஜராக விரும்பினால், அது ஏன் என்பதை உங்கள் ஜாமீன் மனு படிவத்தில் நீங்கள் குறிப்பிட வேண்டும். நீங்கள் நீதிமன்றத்தில் இருக்க வேண்டிய தேவையை உங்கள் சூழல்கள் ஏன் குறிக்கின்றன என்பதற்கு நீங்கள் விளக்கம் தரவேண்டும். உதாரணமாக, உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அனுபவம் ஏற்பட்டிருக்கலாம் அல்லது வீடியோ இணைப்பு உங்களுக்கு பொருந்தாமல் இருக்கும் வகையில் நீங்கள் ஏதேனும் மருத்துவ நிலையால் பாதிக்கப்பட்டிருக்கலாம். உங்கள் விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற வேண்டுமா அல்லது வீடியோ இணைப்பின் மூலம் நடைபெற வேண்டுமா என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும். இது குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின், BID உடன் பேசவும்.

## எனக்கு ஜாமீன் அளிக்கப்பட்டிருப்பதை நான் எப்படி அறிந்து கொள்வது?

உங்களுக்கு ஜாமீன் அளிக்கப்பட்டுள்ளதா அல்லது ஜாமீன் மறுக்கப்பட்டுள்ளதா என்பதை நீதிபதி உங்களுக்குக் கூறுவார். விசாரணையின் முடிவுவரை நீதிபதி அதனைக் கூறாவிட்டால், உங்களுக்குக் கூறும்படி நீங்கள் அவரைக் கேட்கலாம். நீதிபதியின் முடிவை எழுத்து வடிவிலும் காவல் மையத்தில் உங்களுக்கு தொலைநகல் மூலம் நீதிமன்றம் அனுப்பி வைக்கும். உங்களுக்கு ஜாமீன் வழங்கப்பட்டிருந்தால், நீங்கள் ஒரு படிவத்தில்

கையெழுத்திட வேண்டும் மற்றும் உங்கள் ஜாமீன் முகவரிக்கு நீங்கள் செல்வதற்கான பயணச் செலவிற்காக உங்களுக்கு ஒரு 'பயண உறுதியளிப்பு' ('travel warrant') வழங்கப்படும்.

## என் ஜாமீன் மனு மறுக்கப்படால் நான் என்ன செய்வது?

உங்களுக்கு சட்டப் பிரதிநிதி ஒருவர் இருந்தால், இது குறித்து அவரிடம் நீங்கள் பேச வேண்டும். உங்களுக்கு சட்டப் பிரதிநிதி இல்லாவிட்டால், உங்களுக்கு இது குறித்து ஏதேனும் கேள்விகள் இருப்பின், நீங்கள் BID உடன் பேசலாம்.

## என் ஜாமீன் மனு மீதான விசாரணை குறித்த புகாரை நான் எவ்விதம் அளிப்பது?

உங்கள் ஜாமீன் மனு மீதான விசாரணை நடத்தப்படும் முறை குறித்து நீங்கள் புகார் செய்ய விரும்பினால், உங்கள் ஜாமீன் மனு மீதான விசாரணை மேற்கொள்ளப்படும் நீதிமன்றத்திலுள்ள மேலாளரை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும். உங்கள் ஜாமீன் மனு மீதான விசாரணை குறித்து நீங்கள் பெறும் கடிதங்களில் நீதிமன்றத்தின் முகவரி கொடுக்கப்பட்டிருக்கும். நீதிபதியைப் பற்றி நீங்கள் புகார் அளிக்க விரும்பினால், உங்கள் ஜாமீன் மனு மீதான விசாரணை நடைபெறும் நீதிமன்றத்திலுள்ள மூத்த நீதிபதிக்கு நீங்கள் எழுத வேண்டும். உங்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் (MP) உங்கள் சார்பாக புகார் அளிக்கும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளலாம் அல்லது புகார் அளிப்பது குறித்த கூடுதல் விவரங்களுக்கு நீங்கள் BID உடன் பேசலாம்.

## வீடியோ இணைப்பு ஜாமீன் மனு விசாரணைகள் பற்றி வேறு ஏதேனும் விவரம் உள்ளதா?

ஆம். அடைக்கலம் மற்றும் குடிவரவு தீர்ப்பாயம் (Asylum and Immigration Tribunal - AIT) என்றும் அழைக்கப்படும் நீதிமன்றமானது, 'வீடியோ இணைப்பின் மூலம் ஜாமீன் மனு விசாரணை குறித்து விண்ணப்பதாரருக்கு வழிகாட்டும் குறிப்புகள்' ('Applicant Guidance Notes to Bail Hearings by Video Link') என்றழைக்கப்படும் ஆவணத்தை உருவாக்கியுள்ளது. இதனை நீங்கள் உங்களுடைய 'விசாரணைக்கான அறிவிப்பு'டன் பெற வேண்டும். காவல் மையத்திலுள்ள நூலகத்திலும் இந்த ஆவணத்தின் பிரதியொன்று வைக்கப்பட வேண்டும்.

## BID மற்றும் அகதிக் குழு (Refugee Council) என்பவர்கள் யார் மற்றும் அவர்கள் இச்சிற்றேட்டை ஏன் எழுதியுள்ளனர்?

இச்சிற்றேடு, குடிவரவு காவலில் உள்ளவர்களுக்கு ஜாமீன் (BID) மற்றும் அகதிக் குழுவினால் எழுதப்பட்டுள்ளது. BID மற்றும் அகதிக் குழு ஆகியவை தனி அறக்கொடை அமைப்புகளாக இருப்பவை, அவை உள்துறை அமைச்சகத்தின் ஓர் அங்கம் அல்ல. காவல் மையங்களில் உள்ள அடைக்கலம் நாடுவோர் மற்றும் குடிபெயர்வோர் ஆகியோரை காவலில் இருந்து விடுவிப்பதற்கு, அவர்களுடன் இணைந்து BID பணி செய்கிறது. அடைக்கல நடைமுறையின் பல்வேறு நிலைகளிலும் அடைக்கலம் நாடுவோருக்கு அகதிக் குழு உதவி மற்றும் ஆலோசனையை வழங்குகிறது. இது, அடைக்கலம் நாடுவோர் காவலில் இருக்கும்போது மற்றும் அவர்கள் விடுதலை செய்யப்பட்டபின் ஆலோசனை வழங்குதலையும் உள்ளிட்டதாகும். பொருந்துமானால், அகதிக் குழுவால் உங்களை BID உட்பட பிற அமைப்புகளுக்கு பரிந்துரை செய்ய முடியும்.

## கூடுதல் விவரங்களுக்கு நான் யாரைத் தொடர்பு கொள்ளலாம்?

Campsfield House அல்லது Lindholmeல் நீங்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தால், நீங்கள் Oxfordல் உள்ள BID அலுவலகத்தை 0845 330 4536 என்ற தொலைபேசி மூலமாகவோ அல்லது 0845 330 4537 என்ற தொலைநகல் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

Colnbrook, Dover அல்லது Haslarல் நீங்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தால், நீங்கள் Portsmouth ல் உள்ள BID அலுவலகத்தை, 023 9281 6633 என்ற தொலைபேசி மூலமாகவோ அல்லது 023 9282 1529 என்ற தொலைநகல் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

நீங்கள் மற்ற காவல் மையங்களில் காவலில் வைக்கப்பட்டிருந்தால், நீங்கள் Londonல் உள்ள BID அலுவலகத்தை, 020 7247 3590 என்ற தொலைபேசி மூலமாகவோ அல்லது 020 7247 3550 என்ற தொலைநகல் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

நீங்கள் வேறு ஏதேனும் காவல் மையங்களில் காவலில் வைக்கப்பட்டிருந்தால், நீங்கள் அகதிக் குழுவின் அலுவலகத்தை 020 7346 6777என்ற தொலைபேசி எண் மூலம் தொடர்பு கொள்ளலாம்.